

தமிழறிஞர் மறைமலை அடிகளார் அவர்களின் 147வது பிறந்த நாளை முன்னிட்டு பல்லாவரத்தில் அவர் வாழ்ந்த இல்லத்தில் உள்ள திருவுருவச் சிலைக்கு அரசின் சார்பில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆ.ர.ராகுல் நாத், சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ் உள்ளனர்.



சுதந்திர போராட்ட வீரர் தோழர்.சங்கரய்யா அவர்களின் 102வது பிறந்தநாளை யொட்டி குரோம்பேட்டையில் உள்ள அவரது இல்லத்திற்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேரில் சென்று பொன்னாடை போர்த்தி மரியாதை செய்தார். அருகில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், பகுதி செயலாளர்கள் த.ஜெயகுமார், இ.எஸ்.பெர்னாட் ஆகியோர் உள்ளனர்

### மதுரைக்கு மற்றொரு அடையாளமாகத் திகழும் வகையில்

# கலைஞர் நூற்றாண்டு நூலகம்: முதல்வருக்கு நன்றி - பாராட்டு!

## திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக கூட்டத்தில் தீர்மானம்!

திருப்பூர், ஜூலை 17-

திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கூட்டம் மாவட்டக் கழக அலுவலகமான, கலைஞர் அறிவாலயம்”, தளபதி அரங்கில்” அவைத்தலைவர், இரா.ஜெயராமகிருஷ்ணன் தலைமையில், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கழக மகளிர் அணி துணைச் செயலாளர், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் கலந்து கொண்டனர்.

இதில் மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் டி.சக்திவேல், பெ.பிரபாவதி, பொருளாளர் கே.எம்.முபாரக் அலி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் கே.எஸ்.தனசேகர், சி.சியாம்பிரசாத், வி.மகாலிங்கம், பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.ஆர்.பாபு, வழக்கறிஞர் ஆ.இராமலிங்கம், யு.என்.பி.குமார், கே.எஸ்.கருணாகரன், ஆர்.சிவக்குமார், எ.கே.கார்த்திகேயன், சா.மெய்யப்பன், எம்.பருவதவர்த்தினி, ஒன்றிய கழக செயலாளர்கள் கே.சந்திரசேகரன், சி.செந்தில்குமார், ப.பழனிசாமி, துரை தமிழரசு, சா.ராஜமாணிக்கம், ச.கிரி, சி.பிரபு, எஸ்.ஆர்.எஸ்.செல்வம் (எ) தமிழ்செல்வம், சி.கருணை பிரகாஷ், கே.கே.சிவானந்தன், எம்.எஸ்.முரளி, எம்.எ. சாகுல் அமீது, கே.ஈஸ்வரசாமி, தி.செழியன், எஸ்.கே.எம்.தங்கராஜ் (எ) மெய்ஞானமூர்த்தி, க.செந்தில் குமார், எஸ்.என்.காணியப்பன், ஜி.கதிர்வேல், என்.கமலகண்ணன், ப.பழனிசாமி, துரைதமிழரசு, நகர கழக செயலாளர்கள் நா.சேமலையப்பன், சு.முருகானந்தம், எஸ்.முருகானந்தம், பேரூர் செயலாளர்கள் கு.குப்புசாமி, எஸ்.அன்பரசு, கோ.சுரேஷ், க.தண்டபாணி, ரா. பன்னீர்செல்வம், என்.பால கிருஷ்ணன், ஆ.பாலகிருஷ்ணன், எஸ்,எம்.ராமசாமி உள்பட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:-

எல்லார்க்கும் எல்லாம் என்ற நோக்கத்துடன் செயல்படும் நமது திராவிட மாடல் அரசின் அனைத்துத் திட்டங்களுக்கும் ஒரு பொதுநோக்கு உண்டு, அதுதான் சமூகநீதி. இந்திய அளவில் மட்டுமல்ல, உலக அளவிலும் சமூகநீதியை அடிப்படையாகக் கொண்ட அரசையும், அதன்மூலம் பல புதுமையான, புரட்சிகரமான திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி, சமத்துவ சமூகத்தை உருவாக்குவதில் நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்ட மாநிலம் நம் தமிழ்நாடு. அதனடிப்படையில் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை என்ற திட்டம் வருகின்ற செப்டம்பர் 15 அன்று கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவங்கி வைக்கப்பட உள்ளது. கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைங்கிணங்க திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழகத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர்களில் எந்தவொரு தகுதியான பயனாளியும் விடுபட்டு விடக்கூடாது என்ற நோக்கில் நமது செயல் உழைப்பால் மக்களின் மனதில் வெல்ல வேண்டும். மகளிருக்கு 1000 ரூபாய் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்திய கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டத்தின் வாயிலாக நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டு, இந்த மகத்தான திட்டத்தை வெற்றி பெற செய்வோம் என திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தின் வாயிலாக ஒருமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

**ராஜதந்திர ஆளுமையாக திகழ்ந்த கலைஞர்!**

தி.மு.க முதன் முதலில் தேர்தல் களம் கண்ட 1957 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து சட்டப்பேரவை உறுப்பினராகப் போட்டியிட்ட அத்தனை தேர்தல்களிலும், வென்றெடுத்தவர். அவருக்கு மட்டுமே உரித்தான அரசியல் தனிப்பெருமை. தமிழ்நாடு சட்டப்பேரவையில் அவரது பங்களிப்பு என்பது பொன்விழாக்காலம் தொடர்ந்தது என்பது வரலாற்றுச் சாதனை. சுதந்திர இந்தியாவின் அரசியலில் தமிழ்நாட்டின் தவிர்க்க இயலாதவராக வலம் வந்தவர், தமிழ்நாட்டு வரலாற்றில் தவிர்க்கவும், மறக்கவும் முடியாத ராஜதந்திர ஆளுமையாக திகழ்ந்தார். தமிழ்நாடு, தமிழ், தமிழர் நலன் என மொழி, இனப் பெருமை காக்கும் திராவிடப் பேரியக்கமாம் தி.மு.கழகத்தின் சீரிய வரலாற்றில் ஒவ்வொரு நாளுமே சிறப்புமிக்கதுதான். நூறாண்டு கடந்த திராவிட இயக்கத்தின் இலட்சியப் பயணத்தில் முக்கால் நூற்றாண்டுக்கும் மேலாக அயராது ஓய்வில்லாமல், களபணியாற்றி தேசிய அரசியலின் பார்வையை தென்னகத்தின் பக்கம் திருப்பியதுடன் மட்டுமல்லாமல், தமிழகத்தின் உத்தரவை டெல்லி ஏற்றிடும் வகையில், தெற்கில் உதித்த திராவிட சூரியனாய் எந்நாளும் ஒளி வீசியவர், சமூக நீதி கொள்கையை கொண்டவர். கலை, இலக்கியம், அரசியல் என முப்பரிமாண துறைகளிலும் வரலாறு படைத்த தமிழினத்தின் ஒப்பற்ற நம்மில் மறைந்தும் மறையாமலும் வாழ்ந்து வருபவர் ஜூன் 3 பிறந்தநாள் கண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாடும் வகையில் வருடம் முழுவதும், திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழகத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, ஊராட்சி, கிளைக் கழகங்கள் தோறும் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள், வழங்கியும், தோரணங்கள் கட்டி, கழகத்தின் இரு வண்ண கொடியை ஏற்றியும், இனிப்புகள் வழங்கியும், நம் நினைவில் குடி கொண்டு இருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிறப்புகளை விளக்கிடும் வகையில் கவியரங்கம், பட்டிமன்றம், கருத்தரங்கம் மற்றும் கலை நிகழ்ச்சிகளும், மாணவ, மாணவிகள் பெருமளவில் பங்கேற்கும் வகையில் கவிதை, கட்டுரை, பேச்சு போட்டி மற்றும் பாரம்பரிய விளையாட்டு நடத்தியும், பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் பாரம்பரிய விளையாட்டான கோலம், கும்மியாட்ட போட்டி நடத்தியும் ஆங்காங்கே இலவச மருத்துவ முகாம் நடத்துவதோடு, ரத்த தானம் மற்றும் கண்தானம் செய்தும், முதியோர், ஆதரவற்றோர் குழந்தைகள், மாற்றுத்திறனாளிகளுக்கு உணவுகள் வழங்கியும், பள்ளி குழந்தைகளுக்கு நோட்டு புத்தகங்கள், எழுது பொருட்கள் வழங்கியும் சிறப்போடும், எழுச்சியோடும் நினைவு கூரும் வகையில் சரித்திர நாயகன் இந்தியாவில் வேறு எந்த தலைவருக்கும் இல்லாத அருமை பெருமைகளை கொண்ட நம் நெஞ்சில் நிறைந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழகத் தோழர்கள் ஒன்றிணைந்து பொதுமக்களும் பங்கெடுத்து கொள்ளும் வகையில் வழிவகை செய்திட வேண்டுமென இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**கல்வி சூரியன் கலைஞர்!**

மதுரைக்கு மற்றொரு அடையாளமாகத் திகழும் வகையில் அதிநவீன வசதிகளுடன் அமைக்கப்பட்ட கலைஞர் நூற்றாண்டு நூலகம். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூறாவது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை புதுநத்தம் சாலையில் மிகப் பெரிய நூலகம் அமைக்கப்படும் என முதல்வர் அவர்கள் அறிவித்தார். அதன்படி, கடந்த ஆண்டு ஜனவரி 11 தேதி நூலகக் கட்டுமானப் பணிகள் தொடங்கின. தற்போது.ரூ.134 கோடியில், சுமார் 2,13,334 சதுர அடி பரப்பில், 7 தளங்களைக் கொண்டதாக கலைஞர் நூற்றாண்டு நூலகம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. சிறுவர்கள், மாணவர்கள், போட்டித் தேர்வர்கள், பொதுமக்கள், வரலாற்று ஆர்வலர்கள், கல்வியாளர்கள் என அனைத்துத் தரப்பினருக்கும் பயனளிக்கும் வகையில் இந்த நூலகம் அமையும் என அரசு அறிவித்திருந்தது. அதுபோலவே, சுமார் 4.3 லட்சம் புத்தகங்களுடன் அழகுற அமைந்துள்ளது இந்த நூலகம். மாற்று திறனாளிகள் பிரிவு, மாநாட்டு அரங்கம், கலைக்கூடம் ஆகியன தரைத் தளத்தில் அமைந்துள்ளன. முதல் தளத்தில் முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகள். அவர் குறித்து பிற அறிஞர்கள் எழுதிய நூல்கள் உள்ளன. இவை தவிர, குழந்தைகளுக்கான அரங்கம், அறிவியல் உபகரணங்கள், நாளிதழ்கள், மாத, வார இதழ்களும் இந்தத் தளத்தில் இடம்பெற்றுள்ளது. இதனை அமைத்து கொடுத்த கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பாராட்டுகளையும், நன்றிகளையும் இக்கூட்டத்தின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறோம்.

**முதல்வருக்கு பாராட்டு!**

சென்னை கிண்டியில் ரூ.230 கோடி செலவில் 15 மாதங்களில் கட்டி முடிக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு மருத்துவமனையில் 20 உயர் சிறப்பு துறைகளில் சிகிச்சைகள் வழங்கப்படும். சென்னை கிண்டி கிங் இன்ஸ்டிடியூட் வளாகத்தில் ரூ.230 கோடியில் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை தரை தளம் மற்றும் 6 மேல் தளங்களுடன் 51,429 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. இந்த மருத்துவமனையில் இதயம், நுரையீல், நரம்பியல், சிறுநீரகவியல், புற்று நோய் உள்ளிட்ட பல்துறை சிகிச்சைகள், 1,000 படுக்கை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.15 மாதங்கள்: கடந்த 2021ம்ஆண்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 97 வது பிறந்தநாளன்று, சென்னை கிண்டியில் உள்ள கிங்ஸ் நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில், புதிதாக பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கட்டப்படும் என்று கழகத்தலைவர், தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்தார். இதன்படி, கடந்த ஆண்டு மார்ச் மாதம் கட்டுமானப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அடிக்கல் நாட்டிய 15 மாதங்களிலேயே மருத்துவமனை திறக்கப்பட்ட மைக்காக கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பாராட்டுகளையும், நன்றிகளையும் இக்கூட்டத்தின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறோம்.

வருகின்ற இரு நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களுக்கு, 1.1.2024 அன்று 18 வயது நிரம்பி அதாவது 01.01. 2006 ம் நாளுக்கு முன் பிறந்து இருக்க வேண்டும். புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த முகாம்களில் கொடுக்க வேண்டும். வாக்காளர் பட்டியலில் இது வரை இடம் பெறாத பெயர்களையும் புதிதாக குடி பெயர்ந்துள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம். மேற்கண்ட பணிகளுக்காக விண்ணப்பம் பெற்று பூர்த்தி செய்து கொடுத்து ஒப்புகை சீட்டு பெற்று கொள்ளலாம். இது மட்டுமின்றி ஆன்லைன் மூலமும் www.nvsp.in, voters helpline App (mobile) பதிவு செய்து குறுச்செய்தி (SMS) மூலம் பதிவை உறுதிபடுத்திக் கொள்ளலாம். இவ்வாறு ஆன்லைனை பயன்படுத்தி வாக்காளர் சேர்ப்பது மட்டுமல்லாமல் இறந்து போன வாக்காளரை நீக்கலாம். ஆன்லைனை பயன்படுத்தி படிவங்களை பதிவேற்றம் செய்து ஒருவர் எத்தனை வாக்காளர்களை வேண்டுமானாலும் நீக்கலாம். அவ்வாறு செய்ய விரும்புவோர் தங்களின் வாக்காளர் அடையாள அட்டையின் எண்ணை பதிவு செய்ய வேண்டும். நேரடியாக பூர்த்தி செய்து கொடுத்தமைக்கு ஒப்புகை சீட்டு தங்களிடம் இருந்தால் மட்டுமே வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெறவில்லையெனில் புகார் அளிக்க ஏதுவாக இருக்கும் என்பதை கவனத்தில் கொள்ளவும். மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, ஊர்க் கிளை கழக செயலாளர், நிர்வாகிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA-2) மற்றும் கழக தோழர்கள் களப் பணி யாற்றிடுவதென திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழக ஒன்றிய, நகர, பேரூர், செயலாளர்கள் கூட்டத்தின் வாயிலாக ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழகத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளை கழக நிர்வாகிகளின் அயராத உழைப்பில் பெருவாரியான புதிய உறுப்பினர்களை சேர்ந்தமைக்கு தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட தொகுதி கண்காணிப்பாளர்கள் மற்றும் மாவட்டக் கழகத்தால் நியமிக்கப்பட்ட வாக்குச்சாவடி கண்காணிப்பாளர்களுக்கும் மாவட்டக் கழகத்தின் சார்பில் ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகளுக்கு நன்றிகளையும், பாராட்டுகளையும் இக்கூட்டத்தின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறது.

தி.மு.கழக ஆட்சியில் பொறுப்பேற்றதிலிருந்து திராவிட மாடல்” ஆட்சியை தமிழகத்தில் சிறப்பாக வழி நடத்திக் கொண்டு வரும் தமிழக முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் பொற்கரங்களால் திறந்து வைக்கப்பட்ட, அறிவிக்கப்பட்ட திட்டங்களை பொது மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் வீடு தோறும் துண்டு பிரசுரங்கள் விநியோகித்தும், திண்ணை பிரச்சாரங்களை, தெருமுனை கூட்டங்கள் நடத்துவதென திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழகத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் சிறப்பாக ஏற்பாடுகள் செய்திடுவதென இக்கூட்டத்தின் வாயிலாக ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருவது!




### திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில் நாளை

# சமூக வலைதள செயற்பாட்டாளர்கள் கலந்துரையாடல் கூட்டம்!

## கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்!

திருவண்ணாமலை, ஜூலை 17 -

திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு சமூக வலைதள செயற்பாட்டாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் நடைபெறவுள்ளது. பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெறும் கலந்துரையாடல் கூட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.

நாளை (18.07.2023 - செவ்வாய்கிழமை) மாலை 5.00 மணிக்கு, திருவண்ணாமலை, வேலூர் சாலை, வேங்கிக்காலில் உள்ள ஆண்டாள் சிங்காரவேலு திருமண மண்டபத்தில் திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு சமூக வலைதள செயற்பாட்டாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் நடைபெறவுள்ளது.

கலந்துரையாடல் கூட்டத்திற்கு கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினரும், மாவட்ட கழகச் செயலாளருமான எ.வ. வேலு தலைமை வகிக்கிறார்.

கழக தணிக்கைக்குழு உறுப்பினர் கு.பிச்சாண்டி முன்னிலை வகிக்கிறார்.

வடக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

சமூக வலைதள செயற்பாட்டாளர்கள் கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்து கொண்டு கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.

விழாவில் தெற்கு மாவட்ட அவைத்தலைவர் த.வேணுகோபால், வடக்கு மாவட்ட அவைத்தலைவர் ஆர்.ராஜேந்திரன், கழக மருத்துவரணி துணை தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.சிவானந்தம், கே.ஆர்.சீதாபதி, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஓ.ஜோதி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பொன்.முத்து, ஆர்.வேல்முருகன், கே.வி.ராஜ்குமார், மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணை செயலாளர் வ.அன்பழகன், மாவட்டப் பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், டி.ஏதட்சணாமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் என்.பாண்டுரங்கன், ப்ரியா ப.விஜய ரங்கன், க.லோகநாதன், ஜெயராணிரவி, விஜய லட்சுமிரமேஷ் உட்பட பலர் கலந்து கொள்கின்றனர்.

# பழவேற்காடு முகத்துவாரம் பணி தொடக்கம்!

பொன்னேரி, ஜூலை 17 -

பொன்னேரி அடுத்த பழவேற்காடு ஏரி இந்தியாவின் மிகப்பெரிய இரண்டாவது உவர்ப்பு நீர் ஏரியாகும். இதனை சுற்றி 60க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. சுமார் 1500க்கும் மேற்பட்ட படகுகளில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடித்து வருகின்றனர்.

இவர்கள் மீன் பிடிப்பதற்காக படகில் செல்லும் முகத்துவாரம் பகுதி ஏரியும், கடலும் சந்திக்கும் இடம் ஆகும். பருவ கால மாற்றத்தினாலும் கடல் அலையின் சீற்றத்தினாலும் அந்த இடத்தில் அடிக்கடி மணல் திட்டுக்கள் உருவாகி முகத்துவாரம் அடைபட்டு போவதால் மீனவர்கள் மீன் பிடிக்க கடலுக்கு செல்ல முடியாமல் அவதிப்பட்டு வந்தனர். ஒவ்வொரு வருடமும் மீனவர்கள் ஒன்று சேர்ந்து அடைபட்ட மணல் திட்டு பகுதிகளை படகு மற்றும் ஜே.சி.பி. எந்திரம் மூலம் உள்ளே சென்று தூர்வாரி சென்று வந்தனர்.

இதைத்தொடர்ந்து பழவேற்காட்டில் நிரந்தர முகத்துவாரம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சுற்றி உள்ள மீனவ கிராமமக்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தனர். இந்த நிலையில் பழவேற்காடு முகத்துவார பணிக்கு ரூ.26.85 கோடி ஒதுக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து பழவேற்காடு முகத்துவார பணி நேற்று காலை தொடங்கியது. இதனால் மீனவர்களின் 40 வருட கனவு நிறைவேறி உள்ளது. மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

# வெள்ளத்தில் தத்தளிக்கும் டெல்லி!

டெல்லி, ஜூலை 17 -

டெல்லி மற்றும் அரியானா, பஞ்சாப் உள்ளிட்ட பகுதியில் பெய்த கனமழையால் யமுனை ஆற்றில் வரலாறு காணாத அளவில் வெள்ளம் கரைபுரண்டோடுகிறது. கடந்த 45 ஆண்டுகளில் இல்லாத அளவில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கால் டெல்லியில் வி.ஐ.பி. பகுதிகள் உள்பட அனைத்து இடங்களும் வெள்ளத்தில் தத்தளிக்கிறது.

இந்த மழை வெள்ளம் தொடர்பான புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் விவாதத்தை ஏற்படுத்தி உள்ளது. அதாவது யமுனா தனது இடத்தை மீட்டெடுக்கிறது என்ற தலைப்பில் யமுனை ஆற்றின் பழைய புகைப்படங்களையும், தற்போது வெள்ளம் பாய்ந்தோடும் பகுதிகளையும் பதிவிட்டு தங்களது கருத்துக்களை பதிவிட்டு வருகிறார்கள். அந்த புகைப்படங்களில் ஒரு காலத்தில் செங்கோட்டையின் பின்புற சுவருக்கு அருகில் யமுனா நதி எவ்வாறு பாய்ந்து செல்கிறது என்பதை காண முடிகிறது. மேலும் யமுனை ஆற்றில் பழைய கால படங்கள் மற்றும் ஓவியங்களையும் டுவிட்டர், இன்ஸ்டாகிராம் போன்ற வலைதளங்களில் பகிர்ந்து வருகின்றனர்.